## பயோ காஸ்

# எரிபொருள் செலவை குறைக்க திட்டம்

**வளசரவாக்கம், ஜன. 26–**

வளசரவாக்கம் மண்டலத்தில் உள்ள மலிவு விலை உணவகத்தில், சோதனை அடிப்படையில், 'பயோ காஸ்' திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம், மாதம் இரண்டு முதல் நான்கு எரிவாயு சிலிண்டர்களை சேமிக்க முடியும்.

வளசரவாக்கம் மண்டலத்தில், 13 மலிவு விலை உணவகங்கள் உள்ளன. ஒரு உணவகத்திற்கு, நாள் ஒன்றிற்கு இரண்டு சிலிண்டர் காஸ் தேவைப் படுகிறது.

### 4 சிலிண்டர்கள் சேமிக்கலாம்

சோதனை அடிப்படையில் வளசர வாக்கம் மண்டல அலுவலகம், பின்புறம் உள்ள மலிவு விலை உணவகத்தில், 'பயோ காஸ்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

மலிவு விலை உணவகத்தில் இருந்து வெளியேற்றப்படும் உணவு, காய்கறி கழிவுகளில் இருந்து சமையல் எரிவாயு தயாரிக்கும் சிறிய ரக பயோ – காஸ் கலன் அமைக்கப்பட்டு உள்ளது.

அது, காற்றில்லா நொதித்தல் முறையில் இயங்குகிறது. அந்த கலனில், 15 கிலோ முதல், 30 கிலோ உணவுக்கழிவில் இருந்து, நாள் ஒன்றுக்கு, ஆறு கன மீட்டர் அளவு சமையல் எரிவாயு உற்பத்தி செய்யும் திறன் உள்ளது.

இத்திட்டம் மூலம், மலிவு விலை உணவகத்தில் பயன்படுத்தப்படும், எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை குறையும். மாதம்தோறும், இரண்டு முதல் நான்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை சேமிக்கலாம்.


இக்கலனில் இருந்து வெளியேறும் பயோஸ்லரி எனும் திரவத்தை தண்ணீருடன் கலந்து தாவரங்களுக்கு உரமாகப் பயன்படுத்தலாம்.

இக்கலனில் உருவாகும் இயற்கை எரிவாயுவான மீத்தேன் எத்தருணத்திலும் வெடிக்கும் தன்மையற்றது. பொதுவாக கழிவுகளிலிருந்து உருவாகும் மீத்தேன் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவது மட்டுமில்லாது, ஓசோன் படலத்தையும் பாதிக்கிறது.

### விரைவில்...

இந்த மீத்தேனை எரிவாயுவாக அல்லது மின்சாரமாக பயன்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழலை மாசு அடையாமல் பாதுகாக்கலாம்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'தற்போது சோதனை ஓட்டமாக, 152வது வார்டு மலிவு விலை உணவகத்தில் பயோ காஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது.




■ வளசரவாக்கம், மலிவு விலை உணவகத்தில் அமைக்கப்பட்டுள்ள பயோ காஸ் கலன்.

அதற்கு, 1.85 லட்சம் ரூபாய் செலவானது. மண்டலத்தில் மற்ற உணவகங்களிலும், இத்திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும்' என்றனர்.